# புவியியல்

# பருவநிலை,மழைப்பொழிவுவானிலை மற்றும் காலநிலை

Q.1) "Climate" என்ற சொல் கிளைமா என்ற _____மொழியில் இருந்து பெறப்பட்டதாகும்.
a)லத்தின்
b)கிரேக்கம்
c)தமிழ்
d)சம்ஸ்கிருதம்
e) விடை தெரியவில்லை

Q.2)குளிர்காலமே இல்லாத பகுதி எது?
a)துருவப்பகுதி
b)கடகரேகை
c)மகரரேகை
d)பூமத்தியரேகை
e) விடை தெரியவில்லை

Q.3)இந்திய காலநிலையின் மிக முக்கிய அம்சமாக விளங்குவது எது?
a)தென்மேற்கு பருவக்காற்று
b)வடமேற்கு பருவக்காற்று
c)வடகிழக்கு பருவக்காற்று
d)தென்கிழக்கு பருவக்காற்று
e) விடை தெரியவில்லை

Q.4)கடக ரேகைக்கும், மகரரேகைக்கும் இடைப்பட்ட பகுதி
a)வெப்ப மண்டலம்
b)மித வெப்ப மண்டலம்
c)குளிர் மண்டலம்
d)இவற்றில் ஏதுமில்லை
e) விடை தெரியவில்லை

Q.5) கேரளா மற்றும் கர்நாடக கடற்கரை பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு உதவும் மழை எது?
a)மல்கோவா சாரல்
b)ரசமலாய் சாரல்
c)மாஞ்சாரல்
d)ரஸ்தோகி சாரல்
e) விடை தெரியவில்லை

Dexter Academy

Q.6)தென்அரை கோளத்தில் மகரரேகைக்கும் அண்டார்டிக்கா வட்டத்திற்கும் இடைப்பட்டப் பகுதி?
a)வெப்ப மண்டலம்
b)மித வெப்ப மண்டலம்
c)குளிர் மண்டலம்
d)இவற்றில் ஏதுமில்லை
e) விடை தெரியவில்லை

Q.7)ஆர்ட்டிக் வட்டத்திற்கும், வடதுருவப்பகுதிக்கு இடையேயும், அண்டார்ட்டிக் வட்டத்திற்கும் தென்துருவப்பகுதிக்கு இடைப்பட்டப் பகுதி?
a) வெப்ப மண்டலம்
b)மித வெப்ப மண்டலம்
c)குளிர் மண்டலம்
d)இவற்றில் ஏதுமில்லை
e) விடை தெரியவில்லை

Q.8) புவியில் இதுவரை பதிவான மிக அதிகபட்ச வெப்ப நிலை
a)56.7°C (133°F)
b)55.7°C (134°F)
c)55.7°C (133°F)
d)56.7°C (134°F)
e) விடை தெரியவில்லை

Q.9) புவியில் இதுவரை பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை
a)-88.2°C
b)-87.2°C
c)-89.2°C
d)-86.2°C
e) விடை தெரியவில்லை

Q.10)நீர்சுழற்சியின் முக்கிய கூறு?
a)மழை
b)கடல்
c)ஈரப்பதம்
d) பனிப்பொழிவு
e) விடை தெரியவில்லை

Q.11)உலகில் இதுவரை பதிவான மிக அதிக பட்ச அழுத்தம்?
a)1082 mb
b)1083 mb
c)1084 mb

Dexter Academy

d)1081 mb
e) விடை தெரியவில்லை

Q.12) ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வடமேற்கு திசையிலிருந்து வீசும் தலக்காற்று எது ?
a)நார்வெஸ்டர்/கால்பைசாகி
b)தென்மேற்கு/பைசாகி
c)ஈஸ்ட்வெஸ்டர்/தல்பைசாகி
d)வெஸ்ட்மினிஸ்டர்/சல்பைசாகி
e) விடை தெரியவில்லை

Q.13) வளிமண்டலத்தில் உள்ள ஈரப்பதத்தின் அளவு
a)0 - 5%
b) 1 - 5%
c) 0 - 6%
d) 1 - 6%
e) விடை தெரியவில்லை

Q.14)ஒரு குறிப்பிட்ட எடைக்கொண்ட காற்றிழுள்ள நீராவியின் எடை
a)சுய ஈரப்பதம்
b)உண்மையான ஈரப்பதம்
c)ஒப்பு ஈரப்பதம்
d)ஈரப்பதம்
e) விடை தெரியவில்லை

Q.15) வடஅரை கோளத்தில் கடகரேகைக்கும், ஆர்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதி
a)வெப்ப மண்டலம்
b)மித வெப்ப மண்டலம்
c)குளிர் மண்டலம்
d)இவற்றில் ஏதுமில்லை
e) விடை தெரியவில்லை

Q.16) சரியான கூற்றை தேர்ந்தெடு
i )பியோபோர்டு அளவை என்ற கருவி காற்றின் வேகத்தை அளவிட பயன்படுகிறது.
i i )இக்கருவி 1805 ஆம் ஆண்டு இராயல் கப்பற்படை அதிகாரியான பிரான்சிஸ் பியோபோர்டு அவர்களால் உருவாக்கப்பட்டது.
i i i )இக்கருவியை முதன முதலில் எச்.எம்.எஸ் பீகால் அவர்களால் அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தப்பட்டது.
a)i )&i i )சரி
b)i i )&i i i )சரி
c)i )&i i i )தவறு
d)அனைத்தும் சரி
e) விடை தெரியவில்லை

Dexter Academy

Q.17) சரியான கூற்றை தேர்ந்தெடு

i )வானிலை வல்லுநர்கள் காற்றின் திசையை அளவிட காற்றுமானி அல்லது காற்று திசைக்காட்டி என்ற கருவிகளைப் பயன்படுத்துகின்றனர்.

i i )காற்றின் வேகத்தை அளக்க அனிமாமீட்டர் என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது. விண்ட்ரோஸ் என்பது காற்றின் திசையையும், வீசும் காலத்தையும் நிலவரைபடத்தில் குறிக்கும் ஒரு வரைபடம்.

i i i )மீட்டிரோகிராப் அல்லது டிரிபில் ரிஜிஸ்டர் என்ற கருவி காற்றின் திசை, வேகம் சூரிய வெளிச்சம், மழை ஆகிய வானிலைக் கூறுகள வரைகோட்டுப்படத்தின் மூலம் பதிவு செய்யும் கருவியாகும்.

a)i )&i i )சரி

b)i i )&i i i )சரி

c)i )&i i i )தவறு

d)அனைத்தும் சரி

e) விடை தெரியவில்லை

Q.18) கூற்று: குளிர்ந்த காலநிலையில் வட இந்தியாவுடன் ஒப்பிடும்போது நாம் ஏன் தென்னிந்தியாவில் கனமான கம்பளி ஆடைகளை அணிவதில்லை.

காரணம்: வட மற்றும் தென்னிந்தியாவில் தட்பவெப்பநிலை மாறுபடுவதே இதற்குக் காரணம்

a)கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை

b)கூற்று சரியானது, ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல

c)கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானவை

d)காரணம் சரியானது, ஆனால் அதற்கும் கூற்றுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

e) விடை தெரியவில்லை

Q.19)கூற்று (A): சமவெளிகள் உள்ள பகுதிகளைக் காட்டிலும் மலைகளில் உள்ள இடங்கள் குளிரானவை.

காரணம் (R): ஒவ்வொரு 1000 மீட்டர் ஏறுதலுக்கும் 6.5°C என்ற விகிதத்தில் வெப்பநிலை குறைகிறது.

a)கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை

b)கூற்று சரியானது, ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல

c)கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானவை

d)காரணம் சரியானது, ஆனால் அதற்கும் கூற்றுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

e) விடை தெரியவில்லை

Q.20) கூற்று (A): கொச்சி கடற்கரை பகுதியில் அமைந்திருப்பதால் இதன் வருடாந்திர சராசரி வெப்பம் 30°C அளவுக்கு மிகாமல் உள்ளது. மாறாக, கடற்கரையிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள டெல்லியின் வருடாந்திர சராசரி வெப்பம் 40°C க்கும் அதிகமாக உள்ளது.

காரணம்(R): கடற்கரைக்கு அருகிலுள்ள காற்று அதிக ஈரப்பதத்தையும், மழைப்பொழிவை உருவாக்குவதற்கான அதிக ஆற்றலையும் கொண்டுள்ளது.

a)கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை

b)கூற்று சரியானது, ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல

c)கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானவை

d)காரணம் சரியானது, ஆனால் அதற்கும் கூற்றுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

e) விடை தெரியவில்லை

Q.21)பொருத்துக:

| | |
|---|---|
| A குளிர்காலம் | 1. ஜூன் முதல் செப்டம்பர் வரை |
| B கோடை காலம் | 2. அக்டோபர் முதல் டிசம்பர் வரை |
| C தென்மேற்கு பருவமழை /மழைக்காலம் | 3. ஜனவரி மற்றும் பிப்ரவரி |
| D வடகிழக்கு பருவமழை | 4. மார்ச் முதல் மே வரை |

a)3412
b)2341
c)3124
d)1234
e) விடை தெரியவில்லை

Q.22)குளிர்காலம் குறித்த பின்வரும் கூற்றுகளில் எது சரியானவை?
a)தெளிவான வானம், சிறந்த வானிலை, மென்மையான வடக்கு காற்றுகள், குறைந்த ஈரப்பதம் மற்றும் மிகுந்த தினசரி பகல்நேர வெப்ப வேறுபாடுகள் ஆகியன இப்பருவத்தின் பண்புகளாகும்.
b)வட இந்தியாவில், காற்றின் திசையானது கிழக்கிலிருந்து மேற்காக உள்ளது.
c)இப்பருவத்தில் பொதுவாக கிழக்கு இமயமலை, தமிழ்நாடு மற்றும் கேரளா மழையைப் பெறுகின்றன
d)இக்காலத்தில் மத்தியத் தரைக்கடல் பகுதியில் உருவாகும் மேற்கத்திய இடையூறுடன் மேலழுத்தங்கள் வட இந்தியாவில் மழையைத் தருகின்றன.
e) மேற்கத்திய இடையூறுகள் பஞ்சாப், ஹரியானா மற்றும் இமாச்சல பிரதேசத்தில் மழைப்பொழிவையும், ஜம்மு-காஷ்மீர் மலை பகுதிகளில் பனிப் பொழிவையும் தருகிறது.
a)a,b,c மட்டும் சரியானது
b)a,e சரியானவை
c)b,d சரியானவை
d)a,c,e சரியானவை
e) விடை தெரியவில்லை

Q.23)கோடைகாலம் குறித்த பின்வரும் கூற்றுகளில் எது சரியானவை?
a)சூரியனின் செங்குத்துக் கதிர்கள் இந்திய தீபகற்பத்தின் மீது விழுகிறது.
b)தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வெப்பநிலை குறைந்து வருகிறது.
c)மத்திய இந்திய நிலப்பகுதியின் பல பகுதிகளில் பகல் நேர உச்ச வெப்பநிலை 35°C ஆக உள்ளது.
d)வளிமண்டல அழுத்த நிலையின் வேறுபாட்டால் அரபிக்கடல் மற்றும் வங்கக் கடல் பகுதிகளில் காற்றானது தென் மேற்கிலிருந்து வட கிழக்கு நோக்கி வீசுகிறது.
a)a&d மட்டும் சரியானது
b)a,b,c மட்டும் சரியானது
c)b,d சரியானது
d)இவை எதுவுமில்லை
e) விடை தெரியவில்லை

Q.24)வடகிழக்கு பருவமழை குறித்து பின்வருவனவற்றில் எது சரியானது?

Dexter Academy

a)தென்மேற்கு பருவமழைக் காற்று இந்திய நிலப்பரப்பில் இருந்து திரும்பி அரேபிய கடலை நோக்கி வீசுகிறது.
b)ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா மற்றும் தென் கர்நாடகாவின் உட்பகுதிகள் மொத்த மழைப்பொழிவில் சுமார் 35 சதவீதத்தைப் பெறுகின்றன.
c)இப்பருவத்தில் நாடு முழுவதும் இரவு நேர வெப்பநிலை கடுமையாக வீழ்ச்சியடைகிறது.
d)கடற்கரைப் பிரதேசங்களில் கனமழையுடன் கூடிய பலத்த புயல் காற்று, பெரும் உயிர்சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்துகிறது.
a)a,b,cமட்டும் சரி
b)b,c,dமட்டும் சரி
c)அனைத்தும் சரி
d)b&d மட்டும் சரி
e) விடை தெரியவில்லை

Q.25)கூற்று (A): இமய மலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது.
காரணம் (R): இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்க்காற்றை தடுத்து இந்தியத் துணைக்கண்டத்தை மிதவெப்பமாக வைத்திருக்கிறது.
a)கூற்று மற்றும் காரணம் இரண்டும் உண்மை: காரணம் கூற்றை விளக்குகிறது
b)கூற்று மற்றும் காரணம் இரண்டும் உண்மை: காரணம் கூற்றை விளக்கவில்லை
c)கூற்று உண்மை காரணம் தவறானது
d)கூற்று தவறானது காரணம் உண்மை
e) விடை தெரியவில்லை

Q.26)பொருத்துக

| | |
|---|---|
| A ஐசோதெர்ம் | 1. சம சூரிய வெளிச்சக் கோடு |
| B ஐசோக்ரைம் | 2. சமவெப்பக் கோடு |
| C ஐசோகெல் | 3. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சமமான குறைந்த சராசரி வெப்பநிலை |

a)312
b)213
c)231
d)123
e) விடை தெரியவில்லை

Q.27) பொருத்துக

| | |
|---|---|
| A ஐசெல்லோபார் | 1.சம மழையளவுக் கோடு |
| B ஐசோபார் | ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒத்தஅழுத்தங்களை காட்டும் சம அழுத்த கோடு |
| C ஐசோஹைட்ஸ் | 3.சம காற்றழுத்தக் கோடு |

a)312
b)213
c)231
d)123

e) விடை தெரியவில்லை

Q.28) சரியான கூற்றை தேர்ந்தெடு

i )வெப்பநிலை என்பது ஒரு குறிப்பிட்ட கனஅளவு காற்றில் குறிப்பிட்ட நேரத்தில் அளவிடப்படுகிறது. இது செல்சியஸ், பாரன்ஹீட் மற்றும் கெல்வின் அளவுகளால் அளவிடப்படுதாகும்.

i i )வானிலை ஆய்வாளர்கள் வெப்பநிலையை அளக்க வெப்பமானி, ஸ்டீவன்சன் திரை வெப்பமானி, மற்றும் குறைந்தபட்ச – அதிகபட்ச வெப்பமானி மூலமும் கணக்கிடுகிறார்கள்.

a)i )மட்டும் சரி

b)i i )மட்டும் சரி

c)i )&i i )தவறு

d)அனைத்தும் சரி

e) விடை தெரியவில்லை

Q.29) சரியான கூற்றை தேர்ந்தெடு

i )24மணி நேரத்திற்குள் அதிகபட்ச மற்றும்
குறைந்தபட்ச வெப்பநிலை சராசரி தினசரி வெப்பநிலை என்று அழைக்கப்படுகிறது. வெப்பநிலை வரம்பு என்பது ஒரு நாளின் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைகளுக்கு இடையிலான வேறுபாடு ஆகும்

i i )வருடாந்திர வெப்பநிலை வரம்பு என்பது ஒரு வருடத்தின் அதிகபட்ச மற்றும் குறைந்த சராசரி மாதாந்திர வெப்பநிலைகளுக்கு இடையிலான வேறுபாடு ஆகும்.

.a)i )மட்டும் சரி

b)i i )மட்டும் சரி

c)i )&i i )தவறு

d)அனைத்தும் சரி

e) விடை தெரியவில்லை

Q.30) தவறான கூற்றை தேர்ந்தெடு

a)மழைநீரே எல்லாவகையான நீருக்கும் முக்கியமான ஆதாரமாக விளங்குகிறது.

b)வெப்ப நிலை மற்றும், மழைபரவலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது.

c) பொதுவாக மழைப்பொழிவு நிலநடுக்கோட்டுப் பகுதிகளில் குறைவாகவும் துருவப்பகுதிகளை நோக்கிச் செல்லச்செல்ல மழையின் அளவுஅதிகரிக்கிறது

d)மழைப்பொழிவு மழை மானியால் அளவிடப்படுகிறது.

e) விடை தெரியவில்லை

Dexter Academy